செ.வெ.எண்:725 நாள் :09.11.2020

**தஞ்சாவூர் மாவட்டம் மாணங்கோரை கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் புகைப்படக்கண்காட்சி இன்று (09.11.2020) நடைபெற்றது.**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாணங்கோரை கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் புகைப்படக்கண்காட்சி இன்று (09.11.2020) நடைபெற்றது.

இப்புகைப்படக்கண்காட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் முதலமைச்சரின் குடிமாமரத்து திட்டம்,தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய புகைப்படங்கள் மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன.

மேலும், விலையில்லா கறவைப் பசுக்கள், விலையில்லா வெள்ளாடுகள், மற்றும் கால்நடைகளுக்கு குறைந்த விலையில் தீவனப்புல், முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, சத்துணவுத் திட்டத்தின் மூலம் சத்துமாவு உருண்டை வழங்குதல், திருமண உதவி மற்றும் விவசாய இடுபொருட்கள் வழங்குதல், மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம், மாணவ, மாணவிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டை, விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டிகள், சீருடைகள், போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் பற்றிய புகைப்படங்கள் இடம் பெற்றிருந்ததை 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

---

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்